அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2023/2024

# தமிழ்

## ஆண்டு 6

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்:** 100<br>(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: சனிக்கிழமை** | **பக்கங்கள்:** 11 |

**பெயர்:**

**தமிழ்ப்பள்ளி:**

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப் பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடியிடுக.**

1. தமிழிலுள்ள முதலெழுத்துகளின் எண்ணிக்கை

   ☐ முப்பது ☐ இருநூற்றுப்பதினாறு ☐ இருநூற்றுநாற்பத்தேழு

2. பண்பாட்டின் உயர்வைக் காட்டும் கூறு

   ☐ முதிர்ச்சி ☐ இசை ☐ நாகரிகம்

3. வீரர்கள் என்பது

   ☐ பலவின்பால் ☐ பலர்பால் ☐ ஆண்பால்

4. ஆழிக்குமரன் ஆனந்தன் பிறந்த இடம்

   ☐ மன்னார் ☐ வவுனியா ☐ வல்வெட்டித்துறை

5. காடு என்பதன் ஒத்தபொருட்சொல்

   ☐ கானகம் ☐ நாடு ☐ மரம்

6. திருக்குறளில் கண்ணுடையோர் என்று சொல்லப்படுவோர்

   ☐ கற்றோர் ☐ கல்லாதவர் ☐ பணக்காரர்

7. முற்காலத்தில் இலக்கியங்கள் இருந்த வடிவம்

   ☐ வரிவடிவம் ☐ உரைநடைவடிவம் ☐ வாய்மொழிப்பாடல்கள்

8. இலையின் காய்ந்துவிட்ட நிலை

   ☐ துளிர் ☐ சருகு ☐ பழுப்பு

9. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன

   ☐ ஐம்பொறிகள் ☐ ஐம்புலன்கள் ☐ ஐம்பூதங்கள்

10. சொல்லியத்தின் கருத்தை முடிக்கும் சொல்

    ☐ எழுவாய் ☐ பயனிலை ☐ செயப்படுபொருள்

11. சினைப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

    ☐ சிவப்பு ☐ தொலைக்காட்சி ☐ கால்

12. ஆழிக்குமரன் ஆனந்தன் அவர்கள் ஆற்றிய திறவினைகளின் எண்ணிக்கை

    ☐ ஆறு ☐ ஏழு ☐ எட்டு

13. பேசுகிறாய் எனும் வினைச்சொல் காட்டும் இடம்

☐ தன்மை ☐ முன்னிலை ☐ படர்க்கை

14. பனை மரத்திலிருந்து கிடைப்பது

☐ தேங்காய் ☐ இளநீர் ☐ நுங்கு

15. இலக்கியத்தில் செழித்த மொழி எனக் கவிஞர் நா.முத்துக்குமார் கூறுவது

☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐ சீனம்

16. தமிழரது தனித்தன்மையான பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்று

☐ கொடை ☐ நன்றி மறத்தல் ☐ பொய் பேசுதல்

17. மாமாவுக்கு மாமி போல பூட்டனுக்கு

☐ பூட்டி ☐ பெரியம்மா ☐ அக்கா

18. பூவின் மலர்ந்த நிலையைக் குறிப்பது

☐ அரும்பு ☐ மலர் ☐ சருகு

19. தன் கற்பனையால் பாடலுக்கு அழகு சேர்ப்பது

☐ கவிஞன் ☐ ஓவியன் ☐ சிற்பி

20. அம்மம்மாவின் தாயார் எனக்கு

☐ பூட்டி ☐ பெரியம்மா ☐ பூட்டன்

(20 X 1 = 20 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொற்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

1. உணவகம் ______________________________
2. போர் ______________________________
3. நீச்சல் ______________________________
4. விருந்தினர் ______________________________
5. அறிவித்தல் ______________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள சொல்லியங்களின் உறுப்புகளை நிரற்கூட்டில் எழுதுக.**

1. தமிழர் மாட்டுப்பொங்கல் அன்று மாடுகளைப் போற்றுவர்.
2. திருக்குறள் அறநெறிக் கருத்துகளைக் கூறுகிறது.
3. மாறன் சிறந்த கவிதைகளை எழுதினான்.
4. உழவர் கலப்பையால் வயலை உழுதனர்.

| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | தமிழர் | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | வயலை | |

(10 X 1 = 10 புள்ளிகள்)

**4. பொருத்தமான சொல்லை இடைவெளியில் வைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| கணீர்கணீர் | மனத்தை | |
| செழித்து | போரினால் | படபட |

1. காலையில் மணியோசை ______________________ என ஒலித்தது.
2. சேந்தனது நெஞ்சு அச்சத்தால் ______________________ என அடித்தது.
3. மழை பெய்ததால் மரங்கள் ______________________ வளர்ந்தன.
4. வானவில்லின் அழகு என் ______________________ க் கவர்ந்தது.
5. மக்கள் ______________________ தாயகத்தில் இருந்து வெளியேறினர்.

(5 X 2 = 10 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இலக்கியங்கள் எவற்றை அறிந்து கொள்ள உதவுகின்றன?

______________________________________________

______________________________________________

2. தமிழரது பண்பாடுகளுள் இரண்டினை எழுதுக.

______________________________________________

3. நுண்கலைகளுள் இரண்டினை எழுதுக.

____________________ ____________________

4. தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளுள் இரண்டினை எழுதுக.

____________________ ____________________

5. சார்பெழுத்துகளின் வகைகளை எழுதுக.

______________________________________________

______________________________________________

6. படர்க்கைப் பெயர்கள் இரண்டு எழுதுக.

____________________ ____________________

7. சிரித்தார்கள் என்ற சொல்லின் திணை, பால் என்பவற்றை எழுதுக.

திணை: ____________________ பால்: ____________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**6. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பாடிவரும் ஆறுகள் பல
பரந்துயர்ந்த மலைகளும் பல
கூடநடக்கும் உழவுமாடு
கொடுக்கும் செல்வம் மிகப் பலபல
தென்றல் சிலிர்க்க வரும்சோலை
தனிற் குயிலும்
தேன்சிட்டும் பாடும் அங்கு மாலை
மணக்கும் மலர்

\- பாரதிதாசன்

1. குயில் எங்கிருந்து பாடுகிறது?

______________________________________________

2. மலைகள் எப்படிக் காட்சியளிக்கின்றன?

______________________________________________

3. ஆறுகள் என்ன செய்கின்றன?

______________________________________________

4. குயிலுடன் பாடும் பறவை எது?

______________________________________________

5. பாடலில் இடம்பெற்றுள்ள விலங்கு ஒன்றின் பெயரை எழுதுக.

______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**7. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழர் பண்பாடு
2. உறவைப் பேணுவோம்
3. தமிழ்ப்பள்ளி

(15 புள்ளிகள்)

# பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுமையானவிடை எழுதுக.**

சோமசுந்தரப் புலவர் யாழ்ப்பாணத்திலுள்ள நவாலி என்னும் ஊரில் பிறந்தார். இவர் தங்கத் தாத்தா எனச் சிறுவர்களால் அன்பாக அழைக்கப்பட்டார். சிறு அகவையிலேயே பேச்சாற்றலில் வல்லவாராகத் திகழ்ந்தார். தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றுப் புலமை பெற்றிருந்தார். அத்துடன், ஆங்கில மொழியிலும் இவர் தேர்ச்சி பெற்றிருந்தார். சோமசுந்தரப் புலவர் சிறுவர்களுக்காகப் பாடிய ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை, பவளக்கொடி போன்ற பாடல்கள் மிகவும் புகழ்பெற்றவை. பனை மரத்தின் பெருமைகளைக் கூறும் இவரது 'தால விலாசம்' என்ற செய்யுள் நூல் பலரது பாராட்டைப் பெற்றது. சோமசுந்தரப் புலவர் ஏறக்குறைய 15,000 செய்யுள்களை இயற்றியுள்ளார்.

1. சோமசுந்தரப் புலவர் பிறந்த ஊர் எது?

______________________________

______________________________

2. இவர் ஏறக்குறைய எத்தனை செய்யுள்களை இயற்றியுள்ளார்?

______________________________

______________________________

3. சோமசுந்தரப் புலவர் சிறுவர்களுக்காக எழுதிய பாடல்கள் இரண்டு எழுதுக.

______________________________

______________________________

4. 'தால விலாசம்' என்ற நூல் எதைப் பற்றிக் கூறுகிறது?

______________________________

______________________________

5. சிறுவர்கள் சோமசுந்தரப் புலவரை எவ்வாறு அழைத்தார்கள்?

______________________________

______________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள பிறந்தநாள் அழைப்பு அஞ்சலை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளமிடுக.**

**பிறந்தநாள் அழைப்பு அஞ்சல்**

**நாள்:** 16.04.2023 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** 15:00 மணி
**இடம்:** தாரகை மண்டபம், நெதர்லாந்து

அன்புள்ள திருமாறனுக்கு,

எனது பதினோராவது பிறந்தநாளை நண்பர்களுடன் கொண்டாடவுள்ளேன். எனது அம்மம்மாவும் அம்மப்பாவும் தாயகத்திலிருந்து வருவார்கள். கனடாவில் இருக்கும் பெரியப்பாவும் கொண்டாட்டத்திற்கு வருவார். மாமி இலண்டனிலிருந்து வரும்போது பிறந்தநாள் பரிசாகக் கைத்தொலைபேசி கொண்டுவருவதாகக் கூறியுள்ளார். அப்பா சிறுவர்களுக்கான விளையாட்டுகளையும் இசைநிகழ்ச்சி ஒன்றையும் ஒழுங்குசெய்துள்ளார். 19:00 மணிக்கு இசை நிகழ்ச்சி தொடங்கும். உனது வரவை ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
அன்பு நண்பன்
இ.அழகன்

1. அழைப்பை அனுப்பியவர் திருமாறன். ( )
2. மாமி கைத்தொலைபேசி கொண்டு வருவார். ( )
3. இசை நிகழ்ச்சி 19:00 மணிக்கு நடைபெறும். ( )
4. அழகன் பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளான். ( )
5. கொண்டாட்டம் தாரகை மண்டபத்தில் நடைபெறும். ( )

(5 X 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |